உள்ளார். இன்றைக்கு தொலைக்காட்சியிலும், வானொலியிலும் எந்த அடிப்படையிலே விளம்பரப்படுத்தப்படுகின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. ஆள் இல்லாத கட்சியைக்கூட தூக்கி நிறுத்துவதற்கு இன்றைக்கு தொலைக்காட்சி பயன்படுத்தப்படுகிறது. ஆனால், நாட்டு மக்கள் மனதிலே நிரந்தரமாக புரட்சித் தலைவி அவர்கள் நிலைத்து இருக்கிறார்கள். ஆகவே, தொலைக்காட்சியிலும், வானொலியிலும் நம்முடைய அரசின் சாதனைகளைப் புறக் கணிப்பதனால், நம்முடைய அரசினுடைய திட்டங்களைக் கூற மறுப்பதனால் ஆட்சியின் சாதனைகளை யாராலும் தடுக்க முடியாது. மக்கள் சக்தி மிக்க தலைவியாக, மக்களையே நினைத்துக்கொண்டிருக்கிற முதலமைச்சராகத் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களை இன்றைக்கு இந்த நாட்டு மக்கள் மக்கள் தலைவியாக நினைத்துக் கொண் டிருக்கிறார்கள். ஆகவே, அத்தகைய தலைவியினுடைய திட் டங்களை நம்முடைய திரைப்படப் பிரிவின் மூலமும் மற்றும் தமிழரசு பத்திரிக்கையின் மூலமும் விளம்பரப்படுத்துகிறோம். மேலும், வீடியோ வேன்கள் 10 இருக்கின்றன. இந்த ஆண்டு மேலும் 10 வேன்கள் வாங்கப்பட வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த வீடியோ வேன்கள் மூலம் புரட்சித் தலைவி அவர்களுடைய சாதனைகள் விளக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 155, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

155—

திருமுல்லைவாசல் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளி யாக உயர்த்துதல்

*16400— திரு. து. மூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச் சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்து வதற்கு முன்மொழிவுகள் எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1994 மார்ச் 30]

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி மிகவும் பின் தங்கிய தொகுதி. குறிப்பாக ஏழை ஆதிதிராவிட மக்களும், மீனவ இன மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் அதிகமாக அங்கே வாழ்ந்து வருகின்றனர். இந்தத் தொகுதியின் மையப் பகுதியான சீர்காழியில் 3 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இந்த 3 மேல்நிலைப் பள்ளிகளிலும் கிராமப் பகுதிகளிலிருந்து வருகின்ற மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது கிடையாது. நகரத்தில் இருக்கிறவர்களை மட்டுமே அந்தப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்கிறார்கள். மேலும் திருமுல்லைவாசலில் ஓர் உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. இங்கே சுமார் 1,200க்கு மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள். இந்தப் பகுதி பெரும்பாலும் கடற்கரையை ஒட்டிய பகுதியாக இருப்பதாலும், ஆதி திராவிட மக்கள், மீனவர்கள், முஸ்லீம்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்ந்து வருவதாலும் இங்கே இருக்கிற மாணவர்கள் நடந்து வந்து படிக்கும் ஒரு சூழ்நிலை இருக்கிறது. 10ஆம் வகுப்பு முடித்துவிட்டு, பிளஸ் 1 பயில வேண்டுமானால் சீர்காழியில் இருக்கிற பள்ளியில் இடமில்லை என்று கூறுகிறார்கள். எனவே வசதியின்மையாலும், இடம் கிடைக்காத காரணத்தாலும் அவர்கள் மேலே படிக்காமல் இருந்து விடுகிறார்கள். எனவே இந்த நிலைமையைப் போக்க, கல்விக் கண்ணைத் திறந்து வைக்கும் வகையில் தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் திருமுல்லைவாசல் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமுல்லைவாசல் உயர்நிலைப் பள்ளியில் 6, 7, 8, 9, 10 ஆகிய வகுப்புகளில் 346 ஆண்களும் 174 பெண்களும், ஆக 520 மாணவர்கள்தான் பயிலுகிறார்கள். அது மட்டுமல்லாமல் 13 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கின்ற சீர்காழியில் சபாநாயகர் முதலியார் மேல்நிலைப் பள்ளி, எல்.என்.சி. மேல்நிலைப் பள்ளி, சியாமளா மகளிர் மேல்நிலைப் பள்ளி ஆகிய 3 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஓர் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட வேண்டுமானால் 10 ஆம் வகுப்பில் 50 மாணவர்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். ஆனால் இந்தப் பள்ளியில் 26 ஆண்களும் 19 பெண்களுமாக மொத்தம் 45 பேர்கள் மட்டுமே இருக்கிறார்கள். அந்த வரையறைக்குள் இது வரவில்லை. ஆகவே மாணவர்கள் எண்ணிக்கை உயரும்போது நிதிநிலை அடிப்படையில் அரசு இது குறித்துப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.